அறிக்கை இறுதியில் ''விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது; அதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது'' என முடித்தாலும் அந்த அளவோடு நில்லாமல் அதற்கு முந்தைய பகுதிகளில், விசாரணைக் குழு மேற்கொண்டிருக்கும் பொருள் பற்றிய அரசின் கருத்தை விரிவாகவும், விளக்கமாகவும் கூறியுள்ளது. ஆகவே, என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை முழுக்க முழுக்க நம் விதிகளுக்கு உட்பட்டது. முறையானது என்பதைத் தெரிவித்து தங்கள் தீர்ப்பை வழங்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து எனது தீர்ப்பைப் பின்னர் அறிவிக்கிறேன்.

(5) அறிவிப்பு

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன் வடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற மேலவையில் 3-4-1978 ஆம் தேதியன்று, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/78) திருத்தங்கள் ஏதுமின்றி ஒப்புதல் அளிக்கப் பெற்றுள்ளதாகவும் மற்றும் தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/78) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, பொது விற்பனைவரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 13/78) ஆகியவைகள் 3-4-1978 ஆம் நாளன்று பரிந்துரை ஏதுமின்று ஏற்பளிக்கபெற்றுள்ளதாகவும் மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்திகள் வரப்பெற்றுள்ளன.

(6) அமைச்சரின் அறிக்கை

1-8-77-ல் இரு துணை வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளை திருத்தி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையை *நான் படித்ததாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

---

*405-406-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.